பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 12 | ஞாயிற்றுக்கிழமை | 27.08.2023 | அதிர்வு 26

## கொழும்பில் இருவர் வெட்டிப் படுகொலை

கொழும்பில் வெவ்வேறு இடங்களில் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொரளையில் இளைஞர் ஒருவர் நேற்று வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 07





## கொழும்பில் நேற்றும் பதற்றம்

# கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டை முற்றுகையிட்ட கம்மன்பில அணி!

* இன, மதவாதக் கோஷங்கள் உச்சம்
* ஆர்ப்பாட்டத்தை அடக்கிய பொலிஸ்

**கொழும்பு, ஓகஸ்ட் 27**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு வீடு முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.** 07

# படையைக் குவித்து கஜேந்திரகுமாரை பாதுகாக்கின்றார் ஜனாதிபதி ரணில்!

"கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு அடிபணிந்து பொலிஸாரையும், படையினரையும் அவரின் வீட்டுக்கு முன்பாகக் குவித்து அவரைப் பாதுகாக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க."

– இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்றும், அவருக்குப் பாதுகாப்பு வழங்குவதை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் உதய கம்மன்பில எம்.பி. வலியுறுத்தினார்.

இல்லையேல் ஜனாதிபதி ரணிலின் வீட்டை 06



# எம்.பிக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட இடமளியேன்



### ஜனாதிபதி ரணில் உறுதி

"மக்கள் பிரதிநிதிகளே நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களின் உயிர்களுக்கு அல்லது அவர்களின் வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். 07

## இரகசியம்



என்னுடைய இன்றைய பதிவு ஒரு சொல்லைச் சுற்றி நிழலாடுகின்றது. அந்தச் சொல்லை நான் இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு.

அந்தச் சொல் – 'பிரக்ஞை'. நம்மவர்கள் எழுத்தில் அதை சரளமாகப் பயன் 02

# இனத்துவேசவாதியான கம்மன்பிலவின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியோம்!

## செல்வராசா கஜேந்திரன் சூளுரை



"இனத்துவேசவாதியான உதய கம்மன்பில தலைமையிலான குழுவினரின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப்போவதில்லை."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

"எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் கொழும்பு வீட்டைச் சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி அவரை அச்சுறுத்தி மௌனமாக்கவே சிங்களப் பேரினவாதம் முயற்சிக்கின்றது.

கஜேந்திரகுமார் எம்.பி. மீது இனத்துவேசவாதியான உதய கம்மன்பில முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. அப்பட்டமான பொய்.

கஜேந்திரகுமார் எம்.பிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து கொழும்பிலிருந்து அவரை வெளியேற்றும் நோக்குடனேயே உதய கம்மன்பில தலைமையிலான குழு செயற்படுகின்றது.

இந்தக் குழுவினரின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப்போவதில்லை.

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்கள மயமாக்கலுக்கு எதிரான எமது ஜனநாயகப் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்." – என்றார்.

# அமெ. பறக்கிறார் ஜனாதிபதி ரணில்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

"நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்" என்ற கருத்திட்டத்தின் கீழ் இம்முறை பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கியூபாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள Group of 77 (G77) plus China உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கியூப விஜயத்தை நிறைவுசெய்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுத்தாவிட்டாலும் ஆழமான கருத்தோட்டம் புதைந்த சொல் அது,

'புத்தி', 'சுயநினைவு', 'சுய உணர்வு', 'விழிப்புணர்வு' என்றெல்லாம் அதற்கு அர்த்தங்கள் உண்டு.

ஆங்கிலத்தில் Awareness, Consciousness என்ற சொற்களால் பிரக்ஞையைச் சுட்டலாம்.

ஆன்மீகவியலில் – தத்துவவியலில் – உளவியலில் – ஏன் மருத்துவம், பௌதிகம், இரசாயனம் போன்ற துறைகளில் கூட – பல்வேறு அர்த்தங்களிலும் விளக்கங்களிலும் இந்தச் சொல் கையாளப்படுகின்றது.

இந்தச் சொல்லை நான் இன்று இங்கு கையாண்டிருக்கின்றமைக்கு காரணம் உண்டு.

கடந்த வாரத்தில் நமது அயல் தேசமான இந்தியாவில் அதிகம் பேசப்பட்ட இரண்டு விடயங்களில் இந்தச் சொல் ஆழமாகப் புகுந்து நின்றமைதான் காரணம்.

இந்தியாவில் மட்டுமல்ல, இந்தியா குறித்து முழு உலகிலும் கடந்த வாரத்தில் அதிகம் பேசப்பட்டது இந்தியாவின் 'சந்திராயன் – 3' விண்கலத்தின் சந்திரப் பயணம்தான்.

அந்தப் பயணத்தின் எல்லையாக இந்தியாவின் 'விக்ரம்' லாண்டர் இப்போது இந்தியப் பிரதமர் மோடியினால் 'சிவசக்தி' எனப் பெயர் சூட்டப்பட்ட நிலவின் தென் துருவ பகுதியில் தரையிறங்கிவிட்டது.

அதிலிருந்து இறங்கி நிலவுத் தரையில் ஓடித் திரிந்து பல்வேறு ஆய்வுகளை நடத்தும் குட்டி ரோவரின் பெயர் 'பிரக்ஞான்'. அதன் பெயர் 'பிரக்ஞை' என்ற சொல்லின் அடியில் இருந்து உருவானதுதான்.

நிலவை உணரும் இந்தியாவின் அறிவுக் கருவிக்கு உணர்வு பற்றிய அந்தப் பெயரை வைத்தமை சாலப் பொருத்தமே.

சரி. இந்தச் சொல்லையொட்டி அதிகம் பேசப்பட்ட அடுத்த விடயம் என்ன தெரியுமா?

இந்தியாவின் – தமிழகத்தின் – 18 வயது இளம் சதுரங்க வீரர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா இளவயதில் உலகக் கிண்ண செஸ் இறுதிவரை முன்னேறி, நூலிழையில் சம்பியன் கிண்ணத்தை கோட்டை விட்டமைதான். அவரை இந்திய பிரதமர் மோடி, தமிழக முதல்வர் ஸ்டாலின் உட்பட முழு இந்திய தேசத்தினருமே பெருமிதத்துடன் பாராட்டி விதந்துரைத்துள்ளனர்.

அவரது பெயர் கூட 'பிரக்ஞை' என்பதிலிருந்து முகிழ்ந்ததுதான்.

கடந்த வாரத்தில் இந்தப் பிரக்ஞை என்ற ஒரு சொல் இந்தியாவை ஆட்டிப் படைத்திருக்கின்றது. ஆனால் இந்திய சொல்லாளர்கள் யாரும், கடந்த வாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இரண்டு விடயங்களில் ஒரே சொல்லாட்சி அதிகம் இடம் பெற்றிருந்தமையை ஈண்டு குறிப்பிட்டார்கள் என்று நான் அறியவில்லை. என் மனதில் அது பட்டதனால் அதை நான் குறிப்பிட்டேன். என் வாசகர்களுடன் இன்று பகிர்ந்து கொண்டேன். அவ்வளவு தான்.

# ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்கும் அரசின் முடிவை ஆட்சேபித்துப் போராட்டம்

## நாளை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

– என்.புவியரசன், எஸ்.நிதர்ஷன் –

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இருந்து அரசு பெற்ற கடன்களில் மட்டும் தனித்துக் கை வைக்க முனையும் அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்தும் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் 2023 ஜுலை முதலாம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கு மேற்படி இரு நிதியங்களில் இருந்து அரசு பெற்ற கடன்களில் மட்டும் கைவைக்க அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் இந்த இரண்டு நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 லட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றி தான் உறிஞ்சிக் கொள்ள அரசாங்கம் முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் இரண்டு நிதியங்களின் கணக்குகளின் மீதும் சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினதும் (இந்த நிதியங்களின் அங்கத்தவர்களினதும்) சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை (ஐம்பது வீதம்) எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் இந்த இரண்டு நிதியங்களின் அங்கத்தவர்களுக்கு நிதி ரீதியான உடனடிப்பாதிப்பும் நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் அடையாள போராட்டங்கள் பல இடங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் இங்குள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் மதியம் உணவு இடைவேளையின் போது (12 – 01 மணி) அடையாளப் போராட்டம் ஒன்றினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன.

மேற்படி இரு நிதியங்கள் மற்றும் ஓய்வூதிய நிதிக் கையாளல் மூலம் பாதிக்கப்படவிருக்கும் அரச, அரச மருவிய மற்றும் தனியார் துறை சார்ந்த அனைத்து தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், மக்களையும் இவ் அடையாளப் போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தொழிற்சங்கள் இணைந்து அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

01. – பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ் பல்கலைக்கழகம்.

2 – வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்.

3 – அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்.

4 – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம்.

5 – வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்.

6 – வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம்.

7 – ஸ்ரீ லங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம்.

8– வடமாகாண அரச சாரதிகள் சங்கம்.

9 – வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம்.

–ஆகியன இந்த அழைப்பை விடுத்துள்ளன.

# இரு பஸ்கள் மோதி விபத்து 14 பயணிகளுக்குக் காயம்



நேற்று இரவு தனோவிட்ட பிரதேசத்தில் கம்புரதெனியவீதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் நால்வர் தீவிர சிகிச்சைப்பிரிவில் உள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி சென்ற தனியார் பஸ்ஸூம் கண்டியிலிருந்து கொழும்பிற்கு வந்துகொண்டிருந்த பஸ்ஸூமே மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பு – கண்டிவீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு பஸ்ஸூடன் மற்ற பஸ் மோதியது எனக் கூறப்பட்டது.

# மன்னாரில் மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையின் சின்னம் மடு மாதா ஆலயம்

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு






(மன்னார் நிருபர்)

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜூலி சங் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் இந்தக் கலந்துரையாடலில் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதில் மதத் தலைவர்களின் முக்கிய பங்கு குறித்து ஆராயப்பட்டது என தெரிவித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து வரலாற்று சிறப்புமிக்க மடு மாதா ஆலயத்திற்கு சென்றேன். இந்தப் புனித இடத்திற்கு என்னை வரவேற்றமைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும் பல நூற்றாண்டுகள் மற்றும் மன்னாரில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சக்தி வாய்ந்த சின்னம் என்று மடு மாதா ஆலயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயரை, மன்னார் ஆயர் இல்லத்திலும், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் புதிய பரிபாலகர் எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரை மடு திருத்தலத்திலும் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பாலிநகரில் வர்த்தக நிலையம் தீக்கிரை



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலிநகர் பகுதியில் நேற்று அதிகாலை கடையொன்று தீக்கிரையாகியுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த துரைராசா வசீகரன் என்பவருடைய "வசி ஸ்டோர்ஸ்" என்ற பெயரில் இயங்கி வந்த கடையே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

இது தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டனர். எனினும் தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் இனங்காணப்படவில்லை.

இந்தத் தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூரான் 6 ஆம் நாள் உற்சவம் வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவ ஆறாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமதேராக முருகப்பெருமான் கிடாய் வாகனத்தில் வீதியுலாவந்தார்.

(படங்கள் :- பிரபாகன் டிலக்சன்)

















# கடல் நீரை சுத்திகரித்து யாழ். மக்களின் பாவனைக்காக வழங்குவதற்குத் திட்டம்



கடல் நீரை சுத்திகரித்து நாளாந்த பயன்பாட்டிற்கான நீரை பெற்றுக்கொள்ளும் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் 60 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 லட்சம் பேருக்கு நீர் வழங்க முடியும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், அடுத்த வருட முற்பகுதியில் பணிகளை நிறைவு செய்ய முடியும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் நீர்க் குழாய்களைப் பொருத்துவதற்கான வேலைத்திட்டத்திற்கு விலைமனுக்களை பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் விலைமனு கோரப்படுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

# தேசிய மீலாதுன் நபி விழா இந்தத் தடவை மன்னாரில்

தேசிய மீலாதுன் நபி விழாவை இம்முறை மன்னார் – முசலியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மீலாதுன் நபி விழாவை மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கான கூட்டம் நேற்று மன்னார் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இராஜங்க அமைச்சரும் அபிவிருத்திக் குழு தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இந்த மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# அஸ்வெசும கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

அஸ்வெசும பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது என நலன் புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அனைத்து சிக்கல்களும் நிவர்த்தி செய்யப்பட்ட பயனாளர்களுக்கு முதலாம் தவணை கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பதவியிலிருந்து ஜி.விஜேரத்ன இராஜினாமா செய்தமையினால் நிதியை விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டதையடுத்து, கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை தாமதமானது.

எவ்வாறாயினும், புதிய தலைவராக நேற்று முன்தினம் ஜயந்த விஜேரத்ன பொறுப்பேற்றதையடுத்து, கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

## படையைக் குவித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்றுகையிடவும் தாம் தயங்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராகவும், நாட்டுக்கு எதிராகவும் செயற்படும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரட்டியடித்தே தீருவோம் என்றும் அவர் சூளுரைத்தார்.

தேவை

கல்வி சம்பந்தமான You tube chanel இற்கு ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள presenter தேவை. ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்றவும் எழுதவும் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

0752604360

Required

Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.

Please contact:- 0752604360

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பேரினவாதம் காட்டும் பாதை

தமிழர்கள் தமது வாழ்வியல் ரீதியான உரிமைகளைக் கேட்டால் - நீதி, நியாயத்தை வலியுறுத்தினால் - அவர்களை நாட்டின் தலைநகர் கொழும்பில் கூட வசிக்க அனுமதிக்க மாட்டோம், அதற்கு இடமில்லை.

இதுதான் பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப் போக்கு தீவிரவாதம் இப்போது நமக்குச் சொல்லும் செய்தி. மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக் கிடக்கும் தென்னிலங்கையின் சீழ்ப் பிடித்துப் போயிருக்கும் எண்ணவோட்டம் இதுதான். இனக் கலவர காலங்களில் வெடித்துக் கிளம்பும் இந்தப் பேரினவாத வெறி மீண்டும் இப்போது தன் கைவரிசையைக் காட்டத் தயாராகுகிறது என்பதுதான் இப்போதைய செய்தி.

ஒன்றுபட்ட இலங்கைக்குள், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்ற நியாயமான கோட்பாட்டை வலியுறுத்துகின்ற காரணத்தினால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாம் மூன்று, நான்கு தலைமுறைகளாகக் கொழும்பில் வாழும் வீட்டில் ஜீவிக்கும் உரிமையை இழந்து விட்டார், அவர் அங்கிருந்து துரத்தப்பட வேண்டும் என்பதுதான் பேரினவாத வெறிப் போக்காளர்களின் ஒரே தீர்மானமாக வெளிப்படுகின்றது.

இந்தப் போராட்டம் மூலம் தெற்கில், பௌத்த சிங்கள பேரினவாத வெறியை மீளவும் முழு அளவில் தூண்டி, இனக் குழப்பங்கள் - கலவரங்களை ஏற்படுத்த முனைகிறார்கள் என்பது தெளிவு.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், பொதுத்தேர்தலின் போதும், தாம் கிளறி விட்ட இனவாதம் - பௌத்த சிங்கள வெறிப்போக்கு - பெரியளவில் தமக்கு அரசியல் லாபத்தை ஈட்டித் தந்து, சாதக நிலைமையையும் ஏற்படுத்தியமையால், அந்தச் சுவையில் மீண்டும் அதே வேலையை அவர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோருவது அல்லது வலியுறுத்துவது இலங்கையில் சட்ட மீறல் அல்ல. இலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்டமைப்பின் மேம்பாட்டைக் காப்பாற்றும் இரும்புச் சட்டகமாக இலங்கை அரசமைப்பும், இலங்கையின் சட்டங்களும் உள்ளன என்பது கண்கூடு.

வளைந்தே கொடுக்காத அந்தச் சட்டங்களின் கீழ், தமது இனத்துக்கு நியாயம் கிட்ட முடியாது என்று தெரிந்திருந்தும் கூட, அந்தச் சட்டங்களுக்கு உட்பட்டே, ஏனைய தமிழ்த் தலைவர்கள் போல கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் போராடுகின்றார். தமது மக்களுக்கான கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றார். அது தவறு என்றால், அதை சட்டரீதியாக கையாள வேண்டும். அப்படி அதை எதிர்கொள்ள முடியாமல், கூட்டத்தைக் கூட்டி, மதவாதம் மற்றும் இனவாத வெறியை ஊட்டி, உரிமைக் குரல் கொடுக்கும் தமிழ் தலைமைகளை, அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது பேரினவாதம்.

இந்தக் கோட்பாட்டின் மூலம் - நடத்தையின் வாயிலாக - பேரினவாதம் சொல்ல வரும் செய்தி என்ன?

ஒன்று - தமிழர்களின் போராட்டம் சட்டத்தின்பாற்பட்டது என்றாலும் அதைச் சகித்துக் கொள்ள மாட்டோம். சட்டவிரோதமான முறைகளில் கூட அதை அடக்குவோம்.

அடுத்தது - தமிழர்களின் சட்ட ரீதியான உரிமைக் குரலை நசுக்குவதன் மூலம், அப்படி சட்ட ரீதியாக கேட்டால் சிங்களம் நேர்மையாக நடக்காது - 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் போடாது, பிடுங்கித் தான் எடுக்க வேண்டும் என்று தலைவர் பிரபாகரனும் அவரது போராளிகளும் சொன்னவையும் செய்து காட்டியவையும் சரி, அதுவே ஒரே மார்க்கம் என்று பேரினவாதம் தமிழர்களுக்கு வழி காட்டுகிறது.

அவ்வளவுதான்...!

## கஜேந்திரகுமார் எம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் தலைமையில் பிக்குகள் அடங்கிய அக்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பங்கேற்புடன் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

"நாட்டைப் பிரிக்க முயலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் செயற்பாடுகளைக் கண்டித்தே நாம் அணி திரண்டுள்ளோம்" – என்று போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கு எதிராக இனவாத, மதவாதக் கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

கஜேந்திரகுமாரின் வீட்டைச் சூழ நேற்றும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். விமானப் படையினரும் வந்திருந்தனர். நீர்த்தாரைப் பிரயோக வாகனங்களும் வரவழைக்கப்பட்டிருந்தன.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டை நோக்கி நேற்றுப் பிற்பகல் பேரணியாக வந்தவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். போராட்டக்காரர்கள், கஜேந்திரகுமாரின் வீட்டுக்கு அருகில் செல்வதற்குப் பொலிஸார் இடமளிக்கவில்லை. நீதிமன்றத் தடை உத்தரவையும் பொலிஸார் பெற்றிருந்தனர். சுமார் ஒரு மணிநேரம் அங்கு நின்ற பின்னர் கம்மன்பில அணியினர் கலைந்து சென்றனர்.

நேற்றுமுன்தினமும் கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு முன்பாகப் போராட்டம் நடைபெற்றது. ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லை சீலரதன தேரர் தலைமையிலான மூவர் கொண்ட குழு போராட்டத்தில் ஈடுபட்டது. ஆனால், கம்மன்பில தலைமையிலான நேற்றைய போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## எம்.பிக்களின் உயிர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் கொழும்பு வீடு முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையிலேயே ஜனாதிபதி மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

"எங்கு பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்படுகின்றதோ அங்கு பொலிஸாரையும் படையினரையும் வரவழைத்துப் பாதுகாப்பைப் பலப்படுத்துவேன்.

தற்போது சில தரப்பினர் எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றனர். எம்.பிக்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. எனினும், எம்.பிக்களின் உயிர்களுக்கும், அவர்களின் வீடுகளுக்கும் ஆபத்து ஏற்பட ஒருபோதும் இடமளியேன்." – என்றார்.

## கொழும்பில் இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

பொரளையிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றில் பணியாற்றும் 25 வயதுடைய இளைஞரே குழு மோதலில் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் – இரண்டாம் நவகம்புர பகுதியில் வெட்டுக் காயங்களுக்குள்ளான இளைஞர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவில் பயணித்த ஒருவரால் நேற்றுமுன்தினம் மாலை அவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கிராண்ட்பாஸ் – இரண்டாம் நவகம்புர பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞராவார்.

உயிரிழந்த நபருக்கும் அவரது நண்பருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் அடிப்படையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு முன் நேரடியாக பிரசன்னமானார் கோமகன்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் நலன்களுக்காக செயற்பட்டு வருகின்ற “குரலற்றவர்களின் குரல்“ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன், அன்மைக்காலமாக இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் அழைக்கப்பட்டு விசாரணை என்கின்ற போர்வையில் அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளார். இறுதியாக, ஏப்ரல் 30-2022 அன்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு சுமார் ஒன்றரை மணி நேரம் விசாரிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர், 05/05/2022 ஆம் திகதி யாழிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கோமகன் முறைப்பாடளித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட மனித உரிமைகள் ஆணைக் குழு, சுமார் 15 மாதங்கள் கடந்த நிலையில் நேற்று முன்தினம் கோமகனை மீண்டும் அழைத்துள்ளது.

அதனை ஏற்று ஆணைக்குழுவிற்கு சென்றபோது, அங்கு, பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிங்கள மொழிமூல பதில் தகவலை அவர்கள் வாசித்துக் காட்டியுள்ளனர்.

அதாவது, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் “குரலற்றவர்களின் குரல்” அமைப்பு மற்றும் கோமகனது செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் கேட்டறிந்து கொண்டனர் என்றும், எவ்வேளையிலும் அவரைத் தமது அலுவலகத்திற்கு அழைத்திருக்கவில்லை என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரியப் படுத்தியுள்ளனர் என ஆணைக்குழு கூறியுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உண்மைக்குப் புறம்பான இத்தகு செயற்பாடுகள், குடிமக்கள் சார்ந்து செயற்படுகின்ற சிவில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக கோமகன் கவலை வெளியிட்டுள்ளார்.




# 792 கிலோ பீடி இலைகள் கடற்படையிடம் சிக்கின





புத்தளம் – தில்லையடி கடலோரப் பகுதியில் சுமார் 792 கிலோ நிறையுடைய பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் நேற்று சனிக்கிழமை அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையில், கைவிடப்பட்டிருந்த 23 பொதிகளிலிருந்து இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட இந்தப் பீடி இலைகள் தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரையில் கடற்படையின் பாதுகாப்பில் அவை வைக்கப்படவுள்ளன என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கை – தாய்லாந்து வர்த்தக உடன்படிக்கை; கொழும்பில் 5 ஆவது சுற்றுப் பேச்சுகள் நாளை!

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சு கொழும்பில் நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நாளை இந்தப் பேச்சு ஆரம்பமாகவுள்ளது.

அரசியல், வர்த்தகம், முதலீடு, மூல விதிகள், வர்த்தக வசதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்தப் பேச்சுல் தாய்லாந்தின் வெளியுறவுத்துறை நிரந்தர செயலாளர் பங்கேற்கவுள்ளார்.

பேச்சுகளின் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்று ரீதியிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தில் பெரும் முன்னேற்றத்தை அடையவும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின்
96வது பிறந்தநாள் நினைவுப்பேருரை
தலைவர்
திரு. இ. பேரின்பநாயகம்
எதிர்க்கட்சி தலைவர் - முன்னாள் செயலாளர்
நினைவுப்பேருரை
கலாநிதி கா. விக்னேஸ்வரன்
(முன்னாள் வடகிழக்கு மாகாணசபை செயலாளர்)
சிறப்புரை
திரு S. S. குகநாதன்
(டான் குழுமம்)
சிறப்புரை
வண பிதா S.ஜெபநேசன்
இடம்: தந்தை செல்வா கலையரங்கம்
(யாழ் மத்திய கல்லூரி அருகில்)
காலம்: 27-08-2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
Amirthalingam Memorial Foundation
Moolai, Chulipuram, Jaffna, Sri Lanka
0775274300 / 0777279238
19-08-2023


Singhams Media
அலை ஓசை
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள்
நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து
கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732


Build Your
DREAM
HOUSE
NORTH WALL
ENGINEERING
Consept to Creation
Recently Completed
Projects
Point Pedro
Alval North
Point Pedro
OUR SERVICESS
• Architecturel Design
• Structural Plans
• 2D,3D Drawing
• BOQ
• Interior Design
• Landscaping
: 0777 818 208 / 0774 002 766
: Nelliyady, Jaffna







# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




# சந்திரயான்-3 விக்ரம் லேண்டர் தரையிறங்கிய இடம் ‘சிவசக்தி’







இந்தியா விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவினால் நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட சந்திரயான்-3 விக்ரம் லேண்டர் தரையிரங்கிய இடத்திற்கு ‘சிவசக்தி” எனப் பெயரிடப்பட்டுள்ளது.


பிரதமர் நரேந்திர மோடி இந்த இடத்துக்கு ‘சிவசக்தி பொயின்ட்’ எனப் பெயர் சூட்டப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றிக்கு காரணமான இஸ்ரோ விஞ்ஞானிகளை வாழ்த்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டில் இருந்து நேரடியாக நேற்று பெங்களூருக்கு சென்றிருந்தார்.

பெங்களூரில் உள்ள இஸ்ரோ மையத்துக்குச் சென்ற பிரதமர் மோடி, விஞ்ஞானிகள் அனைவரையும் வெகுவாகப் பாராட்டினார். பிரதமர் மோடிக்கு லேண்டர் எடுத்தப் புகைப்படங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

பிரதமரிடம் லேண்டர் விண்கலனின் மாதிரியை திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் வழங்கியுள்ளார். அவருக்கு பிரதமர் மோடி கைகொடுத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# சூரியனை ஆராய்ச்சி செய்வதற்கான விண்கலத்தை அனுப்ப இஸ்ரோ திட்டம்!



இந்தியா விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்கு அனுப்பிய சந்திரயான் 03 திட்டத்தை தொடர்ந்து சூரியனை ஆராய்ச்சி செய்வதற்கான விண்கலமொன்றை அனுப்ப திட்டமிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

சந்திரயான் 03 விண்கலம் நிலவில் தரையிறங்கி தமது ஆய்வுகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தநிலையில், சூரியனை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆதித்யா எல்1 விண்கலம் எதிர்வரும் செப்டம்பர் 2ஆம் திகதி விண்ணில் ஏவப்படவுள்ளது என இஸ்ரோ அறிவித்துள்ளது.

அதற்கமைய, பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீட்டர் தூரம் கொண்ட சூரியனின் லெக்ராஞ்சியன் புள்ளி ஒன்றில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இந்த விண்கலம், ஸ்ரீ ஹரிகோட்டா ஏவுகணை ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி ஏவுகணை மூலம் அனுப்பப்படும் என இஸ்ரோ குறிப்பிடப்பட்டுள்ளது.

# சோனியா காந்தி காஷ்மீர் பயணம்

ஜம்மு-காஷ்மீர் பயணம் மேற்கொண்டுள்ள சோனியா காந்தி ஸ்ரீநகரில் உள்ள ஏரியில் படகு பயணம் செய்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல்காந்தி லடாக் யூனியன் பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். லடாக் பயணத்தை முடித்துக்கொண்டு, இரு நாள் பயணமாக ஜம்மு-காஷ்மீரின் சிறீநகருக்கு ராகுல்காந்தி சென்றார்.

காஷ்மீரின் கன்டர்பெல் மாவட்டத்திற்கு ராகுல்காந்தி சென்றார். அங்கு அவர் காங்கிரஸ் நிர்வாகிகளை சந்தித்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியும் காஷ்மீர் சென்றுள்ளார். அவர் ராகுல்காந்தியை ஸ்ரீநகரில் நேற்று சந்தித்தார்.

முன்னதாக காஷ்மீர் சென்றுள்ள சோனியா காந்தி ஸ்ரீநகரில் உள்ள நிகீன் ஏரியில் படகு பயணம் மேற்கொண்டுள்ளார். இதுதொடர்பான காணொளி சமூகவலைதளங்களில் பரவி வருகின்றது.

# ரஷ்யாவை பழிதீர்க்க களமிறங்கும் கூலிப்படை!





வாக்னர் கூலிப்படை தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் மரணத்திற்கு பழி வாங்க வாக்னர் படை வீரர்களுக்கு கொமாண்டர் டெனிஸ் கபுஸ்டின் அழைப்பு விடுத்துள்ளார்.

வாக்னர் கூலிப்படையின் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜன் உட்பட விமானத்தில் பயணம் செய்த 10 பேர் விமான விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் ரஷ்ய படைத தளபதிகள் எதிர்த்து மாஸ்கோ நோக்கி அணிவகுத்து சென்றதற்காகவே அவரை திட்டமிட்டு ரஷ்யா கொன்று விட்டது என தகவல்கள் பரவி வருகின்றன.

இதேவேளை, விமான விபத்து ஏற்பட்ட 24 மணி நேரம் கழித்து வாக்னர் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் குடும்பத்தினருக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரங்கல் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் உக்ரைனில் ரஷ்யாவுக்கு ஆதரவாக சண்டையிட்டு வந்த ரஷ்ய கூலிப்படை வீரர்கள், தங்கள் தலைவர் எவ்ஜெனி பிரிகொஜினினின் உயிரிழப்பிற்கு பழிவாங்கும் விதமாக அணிமாறி ரஷ்யாவை எதிர்த்து சண் டையிட தயாராகி வருகின்றனர் என கூறப்படுகின்றது.

மேலும் பழிவாங்க வேண்டும் என் றால் நீங்கள் உக்ரைன் பக்கம் அணி மாற வேண்டும் என்றும், மாஸ்கோ நோக்கிய புதிய அணிவகுப்பிற்கு தங்க ளுடன் வாகனர் வீரர்கள் இணைந்து கொள் ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளனர்.

# உக்ரைனுக்கு ஆதரவாக களமிறங்கிய நெதர்லாந்து!



உக்ரைன் - ரஷ்ய மோதல் நாளுக்கு நாள் வலுவடைகின்ற நிலையில் நெதர்லாந்து தன்னிடம் உள்ள அனைத்து எப் -16 ரக போர் விமானத்தையும் உக்ரைனுக்கு வழங்கி உதவியுள்ளது என தாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கை தொடங்கி 18 மாதங்கள் அடைந்தும் போர் நிறைவடைவதற்கான எத்தகைய சூழலும் இதுவரை வெற்றி கரமாக கைகூடவில்லை.

இதற்கிடையில் அடிக்கடி உக்ரைனிய நகரங்களை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் மற்றும் ட்ரோன் தாக்குதலை ரஷ்யா நடத்தி வருகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக உக்ரைனும் ரஷ்யா மீது ட்ரோன் தாக்கு தலை அவ்வப்போது அரங்கேற்றி வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யாவை எதிர்த்து போர் செய்ய உக்ரைன் மேற்கத்திய நாடுகளிடம் தொடர்ந்து ஆயுத உதவி கோரி வருகிறது.

இதற்கமைய நெதர்லாந்து தன்னிடம் உள்ள அனைத்து எப்-16 ரக போர் விமானத்தையும் உக்ரைனுக்கு அனுப்பி வைத்து உதவியுள்ளது.

அவற்றில் சிலவற்றை மட்டும் உக்ரைனிய வீரர்களின் பயிற்சிக்காக வைத்து இருக்கிறோம் என நெதர்லாந்து நட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித் துள்ள தகவலில், தங்களிடம் 42 போர் விமானங்கள் இருந்தன எனவும் அவற்றில் சிலவற்றை தவிர மற்ற அனைத்தையும் உக்ரைனிய விமானப்படைக்கு அனுப்பி வைத்து இருக்கிறோம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# மடகாஸ்கார் சன நெரிசலில் 15 பேர் பலி!



மடகாஸ்காரில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு உயிரிழந்தவர் களின எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதுடன், காயமடைந்த வர்களின் எண்ணிக்கை 110 ஆக உயர் வடைந்துள்ளது.

மடகாஸ்காரில் இந்திய பெருங்கடல் தீவு போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் பரியா என்ற தேசிய மைதானத்தில் ஆரம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்ச்சியில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு 7 குழந்தை கள் உட்பட குறைந்தது 15 பேர் உயிரிழந் துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# சிறிய இராணுவ முகாம் அகற்றல்



(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த சிறிய இரா ணுவத்தின் முகாம் அகற்றப்பட்டுள் ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கடற் கரை வீதியில் குறித்த முகாம் அமைந் திருந்தது. அம்முகாமில் இருந்து செயற்பட்ட இராணுவத்தினர் பொது மக்கள் பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்திருந்தனர்.

தினமும் வீதி ரோந்து மற்றும் தற்கா லிக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இம்முகாம் இராணுவத்தினர் தற் போது தமது செயற்பாடுகள் அனைத் தையும் நிறுத்தி அவ்விடத்தில் இருந்து நேற்று (25) அகற்றப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் கடந்த காலங்களில் இடம்பெற்றமை காரண மாக இப் பகுதியில் பல தரப்பினரின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் பயிற்சிப்பட்டறை!





(நூருல் ஹுதா உமர் )

அம்பாறை மாவட்ட நூலகர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள் பயிற்சிப்பட்டறை சனிக் கிழமை (19) தென்கிழக்குப் பல்கலைக் கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தென்கிழக்குப் பல் கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத் தீன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், கிழக்குப் பல் கலைக்கழக நூலகர் கலாநிதி ற.த.ஜேயராஜ் சிறப்பு அதிதியாகவும், தென்னிந்தியாவைச் சேர்ந்த பாரதி தாசன்,பல்கலைக்கழகநூலகவிஞ்ஞான பிரிவின் பொறுப்பாளர் கலாநிதி ஆர். பாலசுப்ரமணி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் ஆர். மஹேஸ் வரன் ஆகியோரும் வளவாளர்களாகவும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் பயறு பொதிகள் வழங்கல்

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு உட்பட்ட தீகவாபி திராய்க்கேணி மற்றும் போன்ற பின்னடைந்த கிராமங்களுக்கு அரசின் 2023 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக நடுகைக்கான பாசிப்பயறு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு புதன்கிழமை (25) அட்டாளைச்சேனை பிரதேச செயல கத்தில் அதன் உதவி பிரதேச செயலா ளர் சட்டத்தரணி நஹிஜா முஷாபீர் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத், விவசாய போத னாசிரியர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்



(த.சுபேசன்)

அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்து கொண்டார்.

சிறப்பு நிகழ்வாக 15தொடக்கம் 25வருடங்கள் சேவையாற்றிய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். புதிய நிர்வாகத் தெரிவின் போது திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக திருமதி சி.தவமலர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சிறார்களின் விளையாட்டு விழா





(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று சரா கிட்ஸ் வேர்ல்ட் முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு விழா அதன் அதிபர் எம்எச்எம். அஜுர் (ஸஹ்வி) தலைமையில் நேற்று (25) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அஸ்ஸிராஜ் அதிபர் எஸ் ரினோஸ்டின், அக்கரைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களான எஸ் எம். அப்துல் அமீன், யு எல் ஆரிபின் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு கல்முனை வலயத்தில் புதிய நியமனம்

(வி.ரி. சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் இருவருக்குப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை கோட்டத்தின் கோட்டக் கல்விப்பணிப்பாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். றியால் நியமிக்கப்பட்டார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக முன்னாள் கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நஸ்மியா சனூஸ் நியமிக்கப்பட்டார்.

இருவருக்குமான நியமனக் கடிதங்களை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ் . சஹுதுல் நஜீம் வழங்கி வைத்தார். அவர்கள் கடமைகளை பொறுப் பேற்றுக் கொண்டனர்.

# இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் கல்முனை ஸாஹிரா மாணவன் தெரிவு

(நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைப் பொறியிலாளர்கள் நிறுவனம் இந்த வருடததுக்கான இளம் கண்டுபிடிப்பாளர் எனும் தலைப்பில் மாகாண ரீதியில் அண்மையில் போட்டி ஒன்றை நடத்தியது.


அதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அகில இலங்கை ரீதியில் இறுதிச் சுற்று அண்மையில் இலங்கைப் பொறியிலாளர்கள் நிறுவன தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கல்முனை கல்வி வலய கல்முனை ஸாஹிறாக் கல்லூரி (தேசிய பாடசாலை) சார்பில் கலந்து கொண்ட முஹம்மட் அதீப் (உயர்தர கணித பிரிவு மாணவன்), பாடசாலைப் பிரிவில் பங்கு பற்றி இறுதி சுற்றுவரை சென்று சாதனையை நிலை நாட்டியுள்ளார். இந்த மாணவனுக்கு பாடசாலை சார்பாகவும் பாடசாலை இளம் கண்டுபிடிப்பாளர் கழகம் சார்பாகவும் புத்தாக்குனர் கழகம் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.




குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



உலக சமுதாய சேவா சங்கம் - கொழும்பு மண்டலம்,
இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

கொழும்பு அறிவுத்திருக்கோயில்
SKY
யோகா நிலையம்
திறப்பு விழா

27.08.2023
ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி
அறிவுத் திருக்கதவு திறத்தல்

திறந்து வைப்பவர்:
உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,
அருள்நிதி பத்மஸ்ரீ SKM மயிலானந்தன் அவர்கள்

திறப்புவிழா நிகழ்ச்சிகள்
இடம்: இராமகிருஷ்ண மிஷன் பிரதான மண்டபம்
காலை அமர்வு 10.30 - 1.00 மணி வரை
மாலை அமர்வு 4.30 - 8.00 மணி வரை

சிறப்புரை
திருமதி பாரதி பாஸ்கர்
பட்டிமன்றப் பேச்சாளர், சென்னை, தமிழ்நாடு

இல. 53 1/A, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06, இலங்கை.

# இன்றைய ராசி பலன்கள் - 27.08.2023




இன்று உற்சாகமான நாளாக இருக்காது. பலன்கள் குறைந்து காணப்படும். குழப்பங்கள் காணப்படும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மூலம் நிவாரணம் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணிக்கென அதிக நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இன்று உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவ உங்கள் துணையுடன் பழகும்போது சம்பவங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது.




நீங்கள் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும். உங்கள் செயல்களில் கட்டுப்பாடு வேண்டும். இழப்பு ஏற்படாமல் இருக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் பொறுமையுடனும் ஆற்ற வேண்டும். கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும். எனவே திட்டமிட்டு அதன்படி பணத்தை செலவு செய்ய வேண்டும்.

தோல் எரிச்சல் மற்றும் தேவையற்ற கவலைகள் காரணமாக தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று சற்று அனுகூலம் குறைந்த நாள். உற்சாகம் குறைந்து காணப்படும். இன்றைய நாளை கையாள்வது கடினமாக இருக்கும். இன்று கெடுதலான பலன்கள் காணப்படும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இதற்காக உங்கள் நேரம் மற்றும் முயற்சி செலவாகும். உங்கள் முயற்சிக்கு வெற்றிகரமான பலன் கிடைகாது.

உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள். இதனால் சூடான வாக்குவாதமும் குறைந்த புரிந்துணர்வும் காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்க்கவும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை சாதுர்யமாக கையாள முடியாது.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தைப் பராமரிக்க இயலாது. கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகம் அளிக்கும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

நீங்கள் அர்ப்பணிப்புடன் பணிகளை ஆற்றுவீர்கள். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் லட்சியம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடனான நேர்மையான அணுகுமுறை நல்லுறவிற்கு வழிகாட்டும். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் எளிதில் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் சுறுசுறுப்பின் காரணமாக நீங்கள் சிறந்த ஆற்றலை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி மூலம் நன்மை விளையும். பயணம் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று பணியில் அதிக பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இதன் மூலம் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

உங்கள் துணையின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் அணுகு முறையில் இனிமையான போக்கு காணப்படும்.

உங்கள் கையிலிருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உறுதியாகவும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று திருப்திகரமான நாளாக இருக்காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை சமாளிக்க நம்பிக்கையுடன் முயல வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் மூலம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடியும்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். பணிகள் இறுக்கமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உணர்ச்சிப்பூர்வமான எண்ண ஓட்டங்கள் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் மிகவும் கவனமாக கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.08.2023




இன்று பொறுமையான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் வளர்ச்சி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதன் காரணமாக உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி குறையும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவில் இருக்காது. கூடுதல் பொறுப்புகள் காரணமாக வங்கியிருப்பை சிறந்த முறையில் பராமரிக்க இயலாது.

உங்கள் கணுக்கால்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். எதிர்காலத்துக்கான திட்டமிட இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல உறவுப் பிணைப்பு காணப்படும். இதனால் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். முதலீடு சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நீங்கள் யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் தன்னம்பிக்கைவளரும். உங்கள் செயல்களை ஆற்ற அதிர்ஷ்டத்தை சார்ந்து இருக்காதீர்கள்.

பணியிடத்தில் நம்பிக்கையுடனும் அமைதியுடனும் பணியாற்ற வேண்டியது அவசியம். பணியில் திருப்தி ஏற்படாது.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காண சாதகமான நாளாக இருக்காது.உணர்ச்சிப் பூர்வமாக செயல்படுவதால் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

இன்று கணிசமான தொகையை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணம் கிடைத்தாலும்அதற்கு செலவுகள் ஏற்படும்.

தோல் எரிச்சல் போன்ற பாதிப்பு ஏற்படும்.




இன்று சுமாரான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் சில குறைபாடுகளைக் காண்பீர்கள். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

இன்று உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறு நடக்கலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்த மாட்டீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

பதட்டம் காரணமாக உங்களுக்கு முதுகு வலி, தோள் வலி, கணுக்கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park